## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பராயம்

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் ("கம்பனி") இன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தை தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஓர் அடிப்படையை வழங்குவதற்கு போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள எனக்கு இயலாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது. நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய முக்கியமான பொருண்மையான உருப்படிகள் மாற்று வழிகளினூடாக உறுதிப்படுத்தப்படுவதற்கு அல்லது சரிப்பார்ப்பதற்கு என்னால் முடியவில்லை. இக் காரணத்தினால், நிதி நிலைமைக் கூற்று விபரமான வருமானக்கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகின்ற பெறுமதி அல்லது உறுப்படிகளின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதி அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஏதேனும் சீராக்கல் மேற்கொள்வதற்கு அவசியமானதா என்று உறுதிசெய்ய முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு என்னால் முடியாதிருந்தது.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 01 இன் 32 ஆம் பந்தியின் படி, கணக்கீட்டு நியமத்தின் அனுமதி அல்லது தேவைப்பாட்டின் அடிப்படையினால் அன்றி, ஒரு நிறுவனத்தின் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்யப்படலாகாத போதிலும் பல்வத்தை பிரிவினால், மீளாய்வாண்டிற்கு உரித்தான ரூபா 1,851,103,397 ஆன வருமானம், செலவினங்களுடன் ஈடுசெய்யப்பட்டு நிதிகக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த கிரய வகை நேரடியாக குறித்த செலவினங்களுடன் இனங்காணப்படுவதற்கு கடினம் என்பதால், அவை மீளப்பெறுதலாக கணக்கிடப் பட்டுள்ளன என்றும் 2025 ஆம் ஆண்டில் இந்த நிலையைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் படி, வருமானங்களில் செலவினங்களை ஈடுசெய்யாது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 117 ஆம் பந்தியின் படி, நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். செவனகல பிரிவிற்கு உரித்தான தனியார் கம்பனியிடமிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 7,473,696 தொகையும் 2014 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய கந்தளாய் சீனிக் கம்பனியின் ரூபா 6,002,360 மற்றும் SSP பதுளை செயற்திட்டத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,665,725 | கந்தளாய் சீனிக் கம்பனியின் ரூபா 6,002,360 மற்றும் SSP பதுளை செயற்திட்டத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,002,360 இற்காக 100 சதவீத அறவிடமுடியாக் கடன்களுக் கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தாகவும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடமுடியாக் கடன்களுக்கான ஏற்பாடுகளுக்கான காரணத்தையும் அறவிடமுடியாக் கடன்களுக்கான ஏற்பாடுகளுக்கான கொள்கையையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகைப் பணமும் அறவிடமுடியாக் கடனாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த ஏற்பாடுகளுக்குக் காரணமான விடயங்கள் மற்றும் குறித்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் படி, நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டு தோறும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. அதன்படி, தொடர்ந்து பயன்பாட்டில் உள்ள செவனகல அலகுக்குச் சொந்தமான ரூபா 900,693,578 மற்றும் பெல்வத்த அலகுக்குச் சொந்தமான ரூபா 2,526,842,810 மதிப்புள்ள ஆதன, இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த போதிலும் குறித்த மதிப்பிடப்பட்ட தவறு இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் படி திருத்தப்பட்டு சரியான கைக்கெட்டும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தை அரசாங்கம் கையகப்படுத்தும் போது நிலையான சொத்துக்கள் மறு மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன் எதிர்காலத்தில் சொத்துக்களை மறு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீட்டு அறிக்கையில் சீராக்கம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் படி நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்பட்டு நியம இல 08 இன் படி திருத்தப்பட்டு சரியான தேறிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் படி இருப்பு வழங்கல் விலை நிர்ணயம் செய்கையில் முதல் வந்தது முதல் வெளியேறல் விலை முறை அல்லது எடையிடப்பட்ட சராசரி விலை முறையைப் பின்பற்ற வேண்டிய போதிலும் பெல்வத்த பிரிவால் தவறான முறையில் கணக்கீட்டு மென் பொருளைப் பயன்படுத்தி கடைசியாக கொள்வனவு செய்யப் பட்ட இருப்புகளின் விலையின் அடிப்படையில் இருப்புகளின் வழங்கல் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்ண்டில் கிரயத்திற்கும் வெளியீட்டு விலைக் கும் இடையேயான ரூபா 118,464,545 இன் இனங்காணப் படாத வேறுபாடு இனங்காணப்பட்டு, சீராக்கப்படாது மதிப்பீட்டு சீராக்கல் கணக்கின் மூலம் நிதிக்கூற்றுக் களில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டில் புதிய கணக்கீட்டு மென்பொருளை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. மேலும் எடை யிடப்பட்ட சராசரி முறையைப் பயன்படுத்தி இருப்புகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுவதற்கு உடன்பட்டுள்ளது. | முறையான செயல்முறை பயன்படுத்தப்பட்டு .இலங்கை கணக்கீட்டு நியம இல. 02 இன் படி இருப்புகளை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 41 இன் படி மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான கரும்புச் செய்கை உயிரியல் சொத்துக்களின் கீழ் பெறுமதியிடப் பட்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் செவனகல பிரிவிற்கு உரித்தான உயிரியல் அடையாளம் காணப்பட்டு விஞ்ஞான ரீதியான சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது கரும்பு பயிர்ச்செய்கை பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான செயன்முறை பயன்படுத்தப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியம இல. 41 இன் படி சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெல்வத்த பிரிவில் உள்ள வடிசாலை, திணைக்களத்திற்கு உரிய ரூபா 760,763,818 நிலையான சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காணப்படாது சொத்துக்கள், சொத்து வகுப்புகளின் கூட்டுத் தொகை யாக நிலையான சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அப் பெறுமதியின் அடிப்படை யில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள மீளாய்வாண்டிற்கு உரித்தான ரூபா 294,630,897 பெறுமானத்தேய்வுகளின் துல்லியத் தன்மையை கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிறுவனம் கையகப்படுத்தப் பட்ட நேரத்தில் கூட சரியான நிலையான சொத்துப் பதிவேடு இருக்கவில்லை என்றும், சொத்துக்கள் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு, எதிர்காலத்தில் கணக்கீட்டு நடவடிக்கைகள் சீராக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | சொத்துக்களை சரியாக அடையாளம் கண்டு இதற்குரித்தான பெறுமானத்தேய்வு செலவினமும், சரியாகக் கணக்கிடப்பட்டு, துல்லியமான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒரு திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | விரிவான தகவல்களைக் கொண்ட முறையான தரவுத்தளம் இன்மையால், விவசாயக் கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி கணிப்பிடப்படுகையில் அட்டுறு அடிப்படை பின்பற்றப்படாது மீளாய்வாண்டிற்கு உரித்தாக செவனகல பிரிவால் ரூபா 19,544,668 ஆகவும், பெல்வத்த பிரிவால் ரூபா 67,607,882 ஆகவும், மொத்தம் ரூபா 87,152,550 ஆகவும் காசு அடிப்படையில் விவசாய கடன் வட்டி வருமானம் இனங்காணப் பட்டிருந்தமையால் விவசாய வட்டி வருமானத்தின் துல்லியத் தன்மை உறுதிப்படுத்தப்பட வில்லை. | நடைமுறை சூழ்நிலைகள் காரணமாக, காசு அடிப்படையில் வட்டி கணக்கிடப்பட்டுள்ளது என்றும், எதிர்வரும் ஆண்டில் அட்டுறு அடிப்படையில் விவசாய கடன் வட்டி கணக்கிடப்படுவ தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான கட்டமைப்பின் பரிந்துரைகளுக்கு இணங்க, அட்டுறு அடிப்படையில் விவசாய வட்டி வருமானத்தை அங்கீகரித்து கணக்கிட இயலுமான வகையில் ஒரு முறையான திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் பௌதீக இருப்பு கணக்கெடுப்பு அறிக்கைகளின் படி, செவனகல அலகிற்கு உரித்தான ரூபா 1,571,044 மதிப்புள்ள 102 இருப்பு பொருட்களின் பற்றாக்குறையும், ரூபா 2,413,192 மதிப்புள்ள 90 இருப்புப் பொருட்களின் மிகையும் இனங்காணப்பட்டிருந்த போதிலும் இதற்காக நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பௌதீக ரீதியாக சரிபார்க்கப் பட்ட மதிப்பைக் கணக்கிட முடியாத 921 பொருட்களும், பயன்படுத்த முடியாத ரூபா 2,592,026 மதிப்புள்ள 342 இருப்புப் பொருட்களும் களஞ்சியத்தில் காணப்பட்டன. குறித்த இருப்புகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டு முதல் சரியாக அறிக்கையிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | இருப்புகள் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாடு பேணப்பட்டு பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக செயற்படுவதற்கும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட மீதி நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பெல்வத்த சீனி தொழிற்சாலை அரசாங்கத்தால் கையகப்படுத்தப் பட்ட போது, அதிலிருந்து பிரிந்து தனி நிறுவனமாக பால் பொருட்களின் உற்பத்தி மேற்கொள்ளும் ஒரு நிறுவனத் திற்குச் சொந்தமான 20 உழவு இயந்திரங்கள் 2011 முதல் 2024 திசெம்பர் 31 வரை பயன்படுததப்படுவதற்காக அந் நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 70,909,647 தேறிய தொகையும் அந் நிறுவனத்தால் கம்பனிக்கு உரித்தான உத்தியோகபூர்வக் குடியிருப்புகளைப் பயன்படுத்து வதற்காகக் கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 19,738,297 தொகையும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் அத் தொகையை உறுதிப்படுத்து வதற்காக குத்தகை ஒப்பந்தங் கள் அல்லது மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பெல்வத்த பால் நிறுவனத்துட னான ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்டு, குறித்த வீடுகளைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும், அவர்களுக்குச் சொந்தமான 20 உழவு இயந்திரங்களைத் திருப்பி வழங்குவதற்கு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து வைத்து எதிர்காலத்தில் காசு அடிப்படை யில் மாத்திரம் ஒப்பந்தமிட நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும். மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த செவனகல பிரிவிற்கு உரித்தான ரூபா 185,179,302 கிரயமாக இனங்காணப்பட்ட 02 மொலாசஸ் | 2025 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சீராக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. . | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் படி, சொத்து மதிப்பு சரியாக அடையாளம் காணப்பட்டு சரியான வகையின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொட்டிகளின் மதிப்பு, ஆதன, இயந்திர உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்படாது கட்டிடத்தில் (WIP) நடைமுறை வேலையின் கீழ் ரூபா 116,662,960 ஆகவும், ஏனைய பெறவேண்டிய விடயங் களின் கீழ் ரூபா 37,035,860 ஆகவும் கணக்கிடப்பட்டிருந்த துடன் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 31,480,482 தொகை, கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் பெல்வத்த பிரிவின் மனிதவள முகாமைப் பிரிவின் கட்டிடத்தைப் புதுப்பிப்பதற்காக ரூபா 15,571,336 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது குறித்த பெறுமதி மூலதனமாக்கப்படுகையில் நிர்மாணிப்பு நடவடிக்கை களுக்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா 5,558,000 தொழிலாளர் செலவு மூலதனச் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை யால் கட்டிடக் கணக்கின் மீதியும் தக்க வைத்த உழைப்பு ரூபா 5,558,000 வும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில், மூலதன நிர்மாணிப்புகளின் தொழிலாளர் செலவுகளும் சேர்க்கப்பட்டு உண்மையான செலவில் கணக்கிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் படி, கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு, சொத்துக்களின் சரியான விலையை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது செவனகல பிரிவால் பெல்வத்தே பிரிவிற்கும், எதிமலே பிளாண்டேஷன் வரையறுக்கப் பட்ட தனியார் கம்பனிக்கும் 15,310.25 மெட்ரிக் தொன் மற்றும் 11,623.93 மெட்ரிக் தொன் அளவிலான கரும்பு வழங்குவதற்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 181,426,462 தொகையும் ரூபா 164,590,391 தொகையும் வருமானமாக கணக்கீடு செய்யப்படாது கரும்பு கொள்வனவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதன் காரண மாக வருடத்திற்கான வருமான மும் செலவினமும் ரூபா 346,016,853 படி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுவதுடன் 2025 ஆம் ஆண்டு சரியாக அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான தொடர்புடைய வடிவமைப்பு கட்டமைப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதன் படி வருமானமும் செலவுகளும் ஒன்றையொன்று ஈடுசெய்யாது சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் இதை உறுதி செய்வதற்கு ஒரு உள்ளகச் செயற்பாட்டை அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் செவனகல பிரிவு, விற்பனைச் செலவினத் தைக் கணக்கிடும் போது, சீனி மற்றும் | அவதானிப்புடன் உடன்படுவதுடன் 2025 ஆம் ஆண்டு முதல் சரியான | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் படி, இருப்புக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்படுத்தப்பட்ட சாராயத்தின் இறுதி இருப்புத் தொகையை தவறான வகையில் நிகர கைக்கெட்டிய பெறுமதிக்கு ரூபா 702,928,831 அதிகப்படுத்திக் கணக்கிடப்பட்டமையால், விற்பனைக் கிரயம் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முறையில் அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. . | அளவிடப்பட்டு, நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் குறித்த கணக்கீட்டுக் குறைபாட்டை நிதிக்கூற்றுக்களில் சீராக்க வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் செவனகல பிரிவால் விவசாயக் கடன்களுக் காக அறவிடப்பட்ட ரூபா 19,544,668 வட்டி வருமானமும், ஊழியர் கடன்களுக்காக அறவிடப்பட்ட ரூபா 4,309,445 வட்டி வருமானமும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் நிலையான வைப்பு வட்டி வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 23,854,113 ஆல் அதிகமாகவும், விவசாயக் கடன் மற்றும் ஊழியர் கடன் வட்டி வருமானம் முறையே ரூபா 19,544,668 மற்றும் ரூபா 4,309,445 ஆல் குறைவாகவும் காண்பிக்கப் பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டில் இதனைச் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. . | வருமானங்கள் சரியான வகையீட்டின் கீழ் இனங்காணப்பட்டு, நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். இதை உறுதிப்படுத்தும் ஒரு நடைமுறையை அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் ஜுலை மாதங்களில் 05 சந்தர்ப்பங்களில் கம்பனியின் பெல்வத்த பிரிவிலிருந்து செவனகல பிரிவுக்கு வழங்கப்பட்டு, உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ரூபா 7,487,688 பெறுமதியான 32,136 லீற்றர் எரி எண்ணெய், 2022 ஆம் ஆண்டின் செலவினமாகக் கணக்கிடப்படாது, 2023 ஆம் ஆண்டில் கம்பனிகளுக்கிடையே யான கணக்கில் (Inter-company Account) வரவு வைக்கப் பட்டமை மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்பட்டிராததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி நாளிலும் ஏனைய பெறவேண்டியவைகளும் தக்க வைக்கப்பட்ட உழைப்புகளும் ரூபா 7,487,688 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்தன. | பெல்வத்த பிரிவிற்கு செவனகலவிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையாக கம்பனிகளுக்கிடையேயான கணக்கில் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், இது தொடர்பாக செவனகல பிரிவில் விசாரணை நடைபெற்று வருவதுடன் அதன் நடவடிக்கை கள் பூர்த்தியானதை அடுத்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் சரியாகக் கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கணக்கீட்டுத் தவறுகள் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செவனகல பிரிவின் பௌதீக இருப்புக் கணக்கெடுப்பு அறிக்கைகளின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மீதி ரூபா 3,439,882,847 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் குறித்த பெறுமதி ரூபா 3,647,457,934 ஆகக் குறிப்பிடப்பட்டதன் காரணமாக இறுதி இருப்பு ரூபா 207,575,087 அதிகமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கியல் மென்பொருளில் உள்ள பிழைகள் காரணமாக இந்த முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் ERP முறைமை ஸ்தாபிக்கப்படுகையில் இக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | இருப்பு தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாடு பேணப்பட்டு பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக செயற்படவும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட மீதி நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலை

இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 இன் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில், கம்பனியின் தொடர்ச்சியான நிலைப்பாடு தொடர்பாக மதிப்பிடுவது முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் மீளாய்வாண்டிற்கான தொடர் நிலைப்பாடு குறித்த எடுகோளை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் இயலுமை குறித்த மதிப்பீட்டிற்காக இலங்கை கணக்காய்வு நியமம் 570, 560 மற்றும் இலங்கை கணக்கீட்டு நியம இல. 10 இன் படி 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையான கம்பனியின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட பின்வரும் விடயங்களின் அடிப்படையில், கம்பனியின் தொடர்ச்சியான நிலைப்பாட்டிற்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பின்வரும் விடயங்கள் இனங்காணப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செவனகல பிரிவினால் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 400,000,000 கடன் வசதிகளுக்கு அமைய, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கொடுப்பனவு செய்யத் தவறிய கடன் தவணைகளின் பெறுமதியும் அதனுடன் தொடர்புடைய கடன் வட்டிகளின் மொத்தத் தொகையும் ரூபா 78,968,618 ஆனதுடன் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் குறித்த பெறுமதி ரூபா 193,541,014 வரை அதிகரித்திருந்தது. | செவனகல பிரிவின் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக இந்தக் கடன் பெறப்பட்ட தாகவும், நிறுவனத்தின் பிரதான வருமானங்களான சீனி மற்றும் எதனோல் விற்பனை இந்த வருடத்தில் மிகக் குறைந்தமையால் இந்தக் கடன் தவணைகளையோ அல்லது வட்டியையோ செலுத்த முடியாதிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் எதிர்கால நடவடிக்கைகளை பாதீடு செய்து அதற்கேற்ப தொழிற்படு மூலதன முகாமைத்துவ தீர்மானங்களை எடுக்க வேண்டியதுடன் தொடர்ச்சியான நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்வத்தப் பிரிவினால் இரண்டு சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 1,500,000,000 பெறுமதியான கடன் வசதிகளுக்கு அமைய, மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளத் தவறிய கடன் தவணைப் பணப் பெறுமதி மற்றும் அதற்குரிய கடன் வட்டியின் மொத்தத் தொகை ரூபா | உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக தற்போதைய சந்தையில் நிலவும் சிரமங்கள் காரணமாக மேற்கண்ட கடன்களுக்கான தவணைகளை செலுத்த முடியாதிருந்ததாகவும் மேற்குறித்த கடன் தொகையில் ரூபா 600 மில்லியன் அடுத்த 05 மாத காலத்திற்காக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 245,348,863 ஆக இருந்ததுடன், 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் அப்பெறுமதி ரூபா 432,867,254 வரை அதிகரித்திருந்தது. | மறுசீரமைப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | செவனகலப் பிரிவின் கடந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட சரியான தேறிய காசு உட்பாய்ச்சல் ரூபா 523,251,980 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் அப்பெறுமதி ரூபா 1,574,065,963 ஆன தேறிய காசுப் பாய்ச்சலாக இருந்தமையால், செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப் பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் 400 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. | செவனகல மற்றும் பல்வத்தப் பிரிவுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட தேறிய காசு உட்பாய்ச்சல் குறைவடைந்துள்ளதாகவும் நிறுவனத்தின் உற்பத்தி விற்பனை செய்யப்படாது இறுதி இருப்பு உயர்வடைந்தமையும் இதற்குக் காரணமாகியது. | - மேற்படி - |
| (ஈ) | பல்வத்தப் பிரிவின் முன்னைய ஆண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான சரியான தேறிய காசு வெளிப் பாய்ச்சல் ரூபா 41,974,681 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் அப்பெறுமதி ரூபா 1,370,527,927 ஆன தேறிய காசுப் வெளிப் பாய்ச்சலாகவே காணப்பட்டமை யால், செயற்பாடுகளினால் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் 3165 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. | செவனகல மற்றும் பல்வத்தப் பிரிவுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட தேறிய காசு உட்பாய்ச்சல் குறைந்துள்ளதாகவும் நிறுவன உற்பத்தி, விற்பனை செய்யப்படாது இறுதி இருப்பு உயர்வடைந்தமையும் இதற்குக் காரணமாகியது. | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செவனகல பிரிவால் மீளாய்வாண்டின் ஜூலை மாதம் முதல் ரூபா 237,716,800 ஆன பெறுமதி சேர் வரி மற்றும் பெல்வத்த பிரிவால் மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதம் முதல் ரூபா 633,173,292 ஆன பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறை வரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. 2025 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அந்தப் பெறுமதிகள் முறையே ரூபா 327,011,636 மற்றும் ரூபா 771,664,822 வரை அதிகரித்திருந்தன. | செவனகல மற்றும் பெல்வத்த பிரிவுகளினால் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி முறையே ரூபா 237,716,800 ஆகவும் ரூபா 771,664,822 ஆகவும் உள்ளமையால் சீனி மற்றும் எதனோல் விற்பனையின் மூலம் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை பேணுவதற்கு போதுமான நிதி கிடைக்கப் பெறாமை இதற்குக் காரணம் எனவும், இது தொடர்பாக வரிசை அமைச்சிற்கும் திறைசேரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிதி நிலைமை சீரானவுடன் நிலுவையில் உள்ள வரிப் பணத்தைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டரீதியான கொடுப்பனவுகள் காலக்கிரமப்படி அனுப்பப்பட வேண்டும். அத்துடன் நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பைப் பேணுவதற்கு முறைப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பெல்வத்த பிரிவினால் மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதம் முதல் விற்பனையின் மீது அறவிடப்பட்ட ரூபா 103,888,252 ஆன சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி மற்றும் செவனகல பிரிவினால் மீளாய்வாண்டின் அக்டோபர் மாதம் முதல் விற்பனையின் மீது அறவிடப்பட்ட ரூபா 15,491,376 ஆன சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி என்பன உள்நாட்டு இறைவரித் திணைக்களத் திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு குறித்த மீதிகள் முறையே ரூபா.130,449,605 மற்றும் ரூபா 28,076,460 வரை அதிகரித்திருந்தன. | பெல்வத்த பிரிவினால் செலுத்தப்பட வேண்டிய சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் ரூபா 103,888,252 உள்ள தாகவும் போதுமான நிதி திரட்டல் மேற்கொள்ளப் படாமையே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செவனகல பிரிவினால் 2012, 2017, 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தாக ரூபா 762,324,096 இற்கான வருமான வரி மற்றும் பெல்வத்த பிரிவினால் 2023 ஆம் ஆண்டிறகாக ரூபா 166,182,242 ஆன வருமான வரி என்பன உள்நாட்டு இறை வரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கவில்லை. 2025 முதலாம் காலாண்டுக்கான சுய வரி மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் 2025 மார்ச் 31 ஆம் திகதிக்கான மொத்த வரிப் பொறுப்பு குறித்த தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை செவனகலவின் ரூபா 762,324,096 தொகையும் பெல்வத்த ரூபா 166,182,242 தொகையுமான வரி நிலுவை மீதி நிலவியதுடன் 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான சுய வரி மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பெல்வத்த பிரிவினால் மீளாய்வாண்டின் ஜுலை மாதம் முதல் ரூபா 223,269,083 ஆன ஊழியர் நம்பிக்கை நிதியம் (EPF) செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2025 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அந்தப் பொறுப்பு ரூபா 183,048,778 ஆக இருந்தது. | 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதியமான ரூபா 183,041,778 ஆனது 2025 மார்ச் மாத இறுதி வரை கணக்கு அறிக்கைகளில் உள்ளதாகவும், நிறுவனம் எதிர்கொண்டுள்ள நிதிச் சிரமங்கள் காரணமாக இதனைத் தீர்ப்பதில் தாமதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஐ) | செவனகல பிரிவினால் கடந்த ஆண்டில் 13,704.10 மெட்ரிக் தொன் சீனி உற்பத்தி | செவனகல பிரிவில் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் உற்பத்திக் | நிறுவனத்தின் முகாமைத்துவக் கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது குறித்த அளவு 11,920 மெட்ரிக் தொன் வரை 13 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், ஒரு மெட்ரிக் தொன் சீனியின் உற்பத்திக் கிரயம் ரூபா 262,690 முதல் ரூபா 321,910 வரை 23 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் இதற்காக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையயில் சம்பளக் கிரயம் ரூபா 270,202,625 (18 சதவீதம்) ஆல் அதிகரித்தமையும், நிதிக் கிரயம் ரூபா 95,076,907 (1255 சதவீதம்) அதிகரித்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன. | கிரயம் உயர்ந்திருப்ப தாகவும், மழை மற்றும் சீனி பிரித்தெடுக்கும் வீதம் இந்த வருடத்தில் முன்னைய ஆண்டுகளைப் பார்க்கிலும் குறைந்ததே இதற்குக் காரணம் எனவும், இந்த வருடத்தில் சீனி மற்றும் எதனோல் விற்பனை குறைந்தமை யால் வருமானம் குறைந்ததன் காரணமாக தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக வங்கி மேலதிகப் பற்றுக்களையும் கடன் வசதிகளையும் பெற வேண்டியிருந்தது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. | முறைமையின் மூலம் கிரய அறிக்கைகளைத் தயாரித்து அதற்கேற்ப கிரயங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | செவனகல பிரிவினால் கடந்த ஆண்டில் 232,068.89 மெட்ரிக் தொன் கரும்புத் தடிகள் உற்பத்திக்குப் பயன்படுத்தப் பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்தப் அளவு 220,909.31 மெட்ரிக் தொன் வரை 4.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. கொள்ளளவுப் பிரச்சினைகள் காரணமாக கடந்த ஆண்டில் 11,926.81 மெட்ரிக் தொன் கரும்புத் தடிகள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாது பெல்வத்த மற்றும் எத்திமலை சீனித் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் குறித்த அளவு 27,022.04 மெட்ரிக் தொன் வரை 127 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | செவனகல பிரிவில் அவ்வப்போது இடம்பெற்ற ஊழியர் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் தரமற்ற கரும்புகள் கிடைத்தமை போன்ற காரணிகளால் இவ் வருடத்தில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட கரும்பு களின் அளவு குறைந்துள்ளது எனவும், கொள்ளளவு போதாமை யால் கரும்புத் தடிகள் பெல்வத்த மற்றும் எத்திமலை தொழிற்சாலை களுக்கு அனுப்பிவைக்கப் பட்டதாகவும், ஆண்டின் போது சில சந்தர்ப்பங் களில் நிறுவனத்தின் கொள்ளளவை விட அதிகமான கரும்புத் தடிகள் கிடைத்தபோது, அவற்றை அரைக்கும் செயல்முறைக்குப் பயன்படுத்த தாமதமானமை யால் கரும்புத் தடிகள் பழைமையாகிவிடலாம் என்பதற்காக இவ்வாறு பெல்வத்த மற்றும் எத்திமலை தொழிற்சாலை களுக்கு அனுப்பப்பட்ட தாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. | தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளில் உகந்த கொள்ளளவு மட்டத்தை அடைவதற்கு முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | இந்த அறிக்கையின் 2.3 பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள படி, நிறுவனத்தின் மொத்த இலாப விகிதம், தேறிய இலாப விகிதம், நடப்பு விகிதம், திரவ விகிதம், இருப்புச் சுழற்சி விகிதம் மற்றும் இருப்பு நிலைக்காலம் ஆகிய முக்கிய நிதி விகிதங்கள் 2021 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்திருந்தன. | நிறுவனத்தின் உற்பத்திக் கிரய அதிகரிப்பு, சீனி மற்றும் எதனோலுக்கான விற்பனை விலைகள் விரைவாகக் குறைந்தமை, நிறுவனத்தின் உற்பத்திகள் விற்பனையாகாது களஞ்சியங்களில் நீண்ட காலமாக குவிந்திருந்தமை போன்ற விடயங்கள் இதற்குக் காரணமாக அமைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முக்கிய நிதி விகிதங்களின் வீழ்ச்சியை மீட்டெடுத்து, நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருந்த பெல்வத்த பிரிவுக்குச் சொந்தமான ரூபா 4,488,950,237 பெறுமதியான சீனி கையிருப்பு, பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தப்படாதமையால், அந்த மீதியின் துல்லியத்தன்மை கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | இருப்பை களஞ்சியப்படுத்து கையிலும் விநியோகத்தின் போதும் ஏற்படும் நெரிசல் காரணமாக சீனி மூட்டை களின் எண்ணிக்கை தெளிவாகக் கணக்கிட முடியாதுள்ளதுடன் எதிர்காலத் தில் இந்நிலையைச் சீராக்கு வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. | இருப்பை பௌதீக ரீதியாக உறுதிசெய்து நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 02 இன் படி, இருப்புக்களை மதிப்பிடு கையில் கிரயம் மற்றும் தேறிய கைக்கெட்டும் பெறுமதி இதில், எது குறைவானதோ அந்த பெறுமதியில் மதிப்பிட வேண்டும். இருப்பினும், கம்பனியால் நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,043,284,490 எனக் காட்டப்பட்டிருந்த மொலசஸ் கையிருப்புக்களை மதிப்பிட்ட அடிப்படை கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக அதன் துல்லியத்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | மொலசஸ் முடிவுக் கையிருப்புகளின் கிரயத்தைக் கணக்கிடுவதற்கு இதுவரை ஒரு முறை தயாரிக்கப்பட வில்லை என்றும், சந்தை விலையின் படி ஒரு கிலோ மொலசஸ் ரூபா 90 என இறுதி இருப்பு மதிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்டதாகவும் முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. | கையிருப்புக் கிரயத்தைக் கணக்கிடுவதற்காக முறையான ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் படி இருப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 19A பிரிவு | பெல்வத்த பிரிவுக்குச் சொந்தமான லேண்ட் ரோவர் வாகனம் நடைமுறையில் உள்ள சட்ட விதிமுறை களுக்கு இணங்காத வகையில் டிபென்டர் வாகன மாக மாற்றப்பட்டிருந்தது. இந்த சட்டவிரோத மாற்றத்திற்காக நீதிமன்றத் தில் கம்பனி, குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு ரூபா 50,000 தண்டப் பணம் செலுத்தியிருந்தது. | இயக்க முடியாத நிலையில் இருந்த இவ்வாகனத்தை 2013 ஆம் ஆண்டில் ரூபா 5,500,000 செலவில் அப்போதைய முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க டிபென்டர் வாகனமாக திருத்தம் செய்யப்பட்ட தாகவும், 2016 ஆம் ஆண்டில் இவ் டிபென்டர் வாகனம் விபத்துக் குள்ளாகி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது இப்பிரச்சினை எழுப்பப்பட்டதாகவும், அதனால் ரூபா 50,000 அபராதம் செலுத்தி வாகனம் விடுவிக்கப்பட்ட தாகவும், இது தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வுப் பிரிவால் விசாரணை நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ’ | பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இழப்பினை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(அ) பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்க மைய அமைச்சரால் 2008 ஜனவரி 25 ஆம் திகதிய இல. 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட கட்டளைகளின் 1 ஆம் பிரிவின் 30 ஆம் இலக்கக் கட்டளை | சீனி உற்பத்தி அல்லது சீனி சுத்திகரிப்பு தொடர்பான தொழிற்சாலைகளுக்கான வருடாந்த சுற்றாடல அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | செவனகல பிரிவுக்கு வருடாந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவை யான சட்டத் தேவைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு வருவதாக வும், இதற்காக ஆரம்பிக்கப்பட்ட உயிர் உர உற்பத்தித் திட்டம் தற்போது தடைப்பட்டுள்ள தாகவும், இதற்கு மேலதிகமாக உற்பத்திச் செயல்பாட்டில் கழிவு நீரைச் சுத்திகரித்து மீண்டும் சுற்றாடலுக்கு வெளியிடும் கழிவு நீர் | சுற்றாடல் பாதுகாப்பு முறைகள் நிறுவப்பட்டு, சட்டத்தின் கீழ் சுற்றாடல் அனுமதிபபத்திரம் பெறப்பட வேண்டும். சட்டத்திற்கு இணங்க அனுமதிப்பத்திரம் பெற நடவடிக்கை எடுக்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சுத்திகரிப்பு நிலையத் திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணத்தின் நிதி பிரமாணம் 371 (02) மற்றும் 2021 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இல. 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ’ | குறித்த ஒழுங்குவிதியின் விதிகளுக்கு முரணாக பிரதம நிறைவேற்று அதிகாரியின் அனுமதியின் பேரில் கட்டுமானப் பணிகளுக்காக சிவில் பராமரிப்பு முகாமையாளருக்கு ரூபா 5,310,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்த துடன், மீளாய்வாண்டின் இறுதியில் குறித்த பணி நிறைவேற்றப்பட்டு 17 மாதங்கள் கடந்திருந்த போதும் அம் முற்பணம் தீர்க்கப்படவில்லை. மேலும், இதற்காக கட்டுமானப் பொருட்களைக் கொள்வனவு செய்கையில் கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றாது கம்பனியின் சிவில் பராமரிப்பு முகாமையாளரின் விருப்பப் படி மேற்கண்ட பணம் செலவிடப்பட்டிருந்தது. அதன் படி, கம்பனிக்குச் சொந்தமில்லாத கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் அங்கீகாரத்தில் ரூபா 5,310,000 பணம் செலவிடப்பட்டிருந்தது. | தொடர்புடைய தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. | பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு கம்பனிக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்பினை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை மற்றும் 2018 ஜூலை 18 ஆம் திகதிய | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் இணக்கத்தைப் பெறாது, சம்பளம் மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெறாது, | தொடர்புடைய தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. ’ | பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை | குறித்த சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்காத வகையிலும், அதிகாரமற்ற குழுவின் பரிந்துரையில் மாத்திரமேயான அடிப்படை யில் செவனகல பிரிவின் ஊழியர் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன. அதிகரிக்கப்பட்ட ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக 2025 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி வரை ரூபா 733,413,947 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன. | | கம்பனிக்கு ஏற்படுத்தியுள்ள இழப்பை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 13 ஆம் திகதிய 2023 இன் 32 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டம் | மீளாய்வாண்டில் செவனகல மற்றும் பெல்வத்த பிரிவு களில் ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஸ்பிரிட்ஸ், சீனி, மொலசஸ் மற்றும் பிற விற்பனையின் மீது வாடிக்கையாளரிட மிருந்து அறவிடப்பட வேண்டிய பெறுமதி சேர் வரியாக முறையே ரூபா 106,817,348 மற்றும் ரூபா 159,480,580 அறவிடப் பட்டிருக்கவில்லை. | மிகவும் கூடுதலான விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்ட மேற்கண்ட இருப்பிற்காக மீண்டும் எமது நிறுவனத்திற்கு பெறுமதி சேர் வரி செலுத்துவதை வாடிக்கையாளர்கள் நிராகரித்ததுடன் அப்போதைய உயர் முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் படி வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதி சேர் வரியை ஈடு செய்வதற்கான வாய்ப்பு கிடைக்காத வகையில் வரி அற்ற விலைப் பட்டியல்கள் மூலம் சீனி விநியோகம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 266,297,928 இழப்பை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொறுப்பான தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2022 ஜனவரி 14 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்காத வகையில் பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளில் 20 அதிகாரிகளுக்கு மேலதிக மாக வழங்கப்பட்ட எரிபொருளுக்காக செவனகல பிரிவு ரூபா 8,318,460 வையும் பெல்வத்த பிரிவு ரூபா 9,378,332 வையும் செலுத்தியிருந்தது. | ஏறத்தாழ 13,500 ஹெக்டேயர் பரப்பள வில் கரும்புப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் படுவதாகவும், அதற்கான மேற்பார்வை நடவடிக்கை களை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு இல. 01/2015 சுற்றறிக்கை யின் படி எரிபொருள் வழங்குவது போதா மையால், நிறுவனத்தின் உள்ளக சுற்றறிக்கையின் | மேலதிக கொடுப்பனவுகள் காரணமாக கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இழப்பினை மீண்டும் மீட்டெடுத்தல் வேண்டும். |

மூலம் தொடக்கத்தில் இருந்து எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 2,061,781,565 நட்டமாக இருந்ததுடன், அதற்குரிய முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,332,281,726 ஆக இருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 4,394,063,291 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் மொத்த செலவு ரூபா 1,187,978,684 ஆல் குறைந்த அதேவேளை, மொத்த வருமானம் ரூபா 5,582,041,974 ஆல் குறைந்தமை இந்நிலைமைக்கு முக்கிய காரணமாகியது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை வருமானம் 33 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன், விற்பனைக் கிரயம் 6 சதவீதத்தினால் குறைந்திருந்தது. மேலும், முன்னைய ஆண்டை விட ஏனைய வருமானங்கள் 33 சதவீதத்தினால் குறைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிச் செலவுகள் 208 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், நிதி வருமானம் 41 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது மொத்த இலாப விகிதம் 35 சதவீதத்திலிருந்து 09 சதவீதம் வரையிலும், தேறிய இலாப விகிதம் 14 சதவீதத்திலிருந்து 19 சதவீத எதிர்மறை வீதம் வரையிலும் குறிப்பிடத்தக்க பெறுமதிகளால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்து விகிதம் 2.3 இலிருந்து 1.82 வரை குறிப்பிடத்தக்க மதிப்பில் வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) இருப்பு சுழற்சி விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3 மடங்கிலிருந்து 0.85 மடங்கு வரையிலும், இருப்பு தங்கு காலம் 144 நாட்களிலிருந்து 445 நாட்கள் வரையிலும் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவைகள் முறையாக அடையாளம் காணப்படாமல் களஞ்சியப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால், செவனகல பிரிவில் ரூபா 73,773,156 பெறுமதியான 3369 இருப்புப் பொருட்கள் 05 வருடங்களுக்கும் மேலாகக் களஞ்சியத்தில் செயலற்றுக் | இந்த இருப்புப் பொருட்களில் பெரும்பாலானவை செவனகல நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது குறித்த கம்பனியால் வழங்கப்பட்ட மானியங்கள் என்றும், அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டதை நிறுவனத்திடம் இருந்த டிராக்டர்கள் மற்றும் | முறையாக ஒரு பரிசோதனை நடத்தி தேவையற்ற இருப்பை முறையாக அகற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டன. | வாகனங்களைத் திருத்து வதற்காக உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் சட்ட ரீதியான காரணங்களால் அந்த டிராக்டர்களும் வாகனங்களும் நிறுத்தி வைக்க நேரிட்டதாகவும், இந்த இருப்பு முறையாக பரீட்சிக்கப்பட்டதை அடுத்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பெல்வத்த பிரிவினால் 2013 ஆம் ஆண்டில் குத்தகை வசதிகளின் கீழ் ரூபா 128,910,000 பெறுமதியான கிரேன் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 120,750,000 மற்றும் அதற்குத் தேவையான மின்சாரத்தை வழங்குவதற்காக ரூபா 2,254,850 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விநியோகஸ்தரால் ஒப்புக்கொண்டபடி அந்த இயந்திரத்தை தொழிற்சாலையில் நிறுவாதமையால், மொத்தமாக ரூபா 123,004,850 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த இயந்திரம் கொள்வனவு செய்த நாள் முதல் பயன்படுத்த முடியாமல் செயலற்றுக் காணப்பட்டது. | இந்த கிரேன் இயந்திரத்தை விநியோகஸ்தரின் செலவில் திருத்தம் செய்து, 2024 ஆம் ஆண்டின் பெரும்போக காலத்தில் மூன்று மாத காலத்திற்கு திட்டத்தை செயற்படுத்தி செயல்திறனை ஆய்வு செய்த பின்னர் நிறுவனத்திடம் ஒப்படைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த விநியோகஸ்தர் அதை நிறைவேற்றத் தவறியதாகவும், அவருக்கு எதிராக வழக்குத் தொடர நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | இந்த சிக்கனமற்ற செலவிற்குப் பொறுப்பான தரப்பினரை அடையாளம் கண்டு, அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு தேவையான சட்ட நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் தலைமை அலுவலகத்தால் மொலசஸ் 5000 மெற்றிக் தொன் இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரக் கட்டணமாக இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா 4,445,682 செலுத்தியிருந்த போதும், கம்பனி, மொலசஸ் இறக்குமதி செய்யாதமையால் அதற்காகச் செலவிடப்பட்ட தொகை விளைவற்றுக் காணப்பட்டது. | அமைச்சுக் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் கடன் கடிதங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அப்போது நாட்டில் நிலவிய டொலர் பற்றாக்குறை காரணமாக இறக்குமதி செய்யப் படாதமையால் செலுத்தப்பட்ட ரூபா 4,445,682 அனுமதிப் பத்திரக் கட்டணத்தை மீண்டும் அறவிட முடியாதிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான விசாரணையை நடத்தி கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இழப்பை பொறுப்பான தரப்பினரிடமிருந்து மீட்டெடுக்கவும், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் பழுப்பு சீனிக்குரிய தரப்படுத்தல் அளவுகோலின் படி, பழுப்பு சீனியின் நிறம் இகும்சா அலகுகள் (ICUMSA Units) 1500 க்குக் | கருத்து தெரிவிக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் சீனி உற்பத்தி செய்வதற்கும், வர்த்தக முறைகேடுகளுக்கு வாய்ப்பளிக்காமல் நுகர்வோர் பாதுகாப்பை |

| | | | |
|---|---|---|---|
| | குறைவாக இருக்க வேண்டிய போதிலும். மீளாய்வாண்டில் செவனகல பிரிவில் உற்பத்தி செய்யப்பட்ட சீனியில் இரசாயன ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட மொத்த மாதிரிகளில் 30 சதவீதத்திற்கும் அதிகமானவற்றின் இகும்சா அலகுகள் 1501 இலிருந்து 5354 வரை மதிப்புகளைக் கொண்டிருந்தன. அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட தரத்தைப் பார்க்கிலும் அதிக பழுப்பு நிறம் கொண்ட சீனி கையிருப்பை மொத்த வர்த்தகர் களுக்கு வழங்குவதன் மூலம், குறைந்த விலையுள்ள வெள்ளைச் சீனியுடன் கம்பனியின் சீனியை கலந்து வர்த்தக முறைகேடுகளைச் செய்வதற்கு வாய்ப்பு கிடைத்திருந்தது. மேலும், பரிசோதனை செய்யப்பட்ட சீனி மாதிரிகளின் படி சீனியில் இருக்க வேண்டிய முனைவாக்கம் (Polarization) மதிப்பு மற்றும் ஈரப்பதன் மதிப்பும் இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் தரங்களுக்கு இணங்கவில்லை. | | உறுதிப்படுத்தவும் முறையான வேலைத்திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். |
| (உ) | 2024 ஜூலை முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதியில் இரசாயன ஆய்விற்கு உட்படுத்தப் பட்ட 540 சீனி மாதிரிகளின் முனைவாக்க (Polarization) மதிப்பும், 520 மாதிரிகளின் ஈரப்பதனும் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இரசாயன ஆய்வகப் பிரிவால் மாதிரிப் பதிவேட்டைப் பேணப்பட்டிராததுடன் பெறப்பட்ட சீனி மாதிரிகளை அடையாளம் காணவும் ஆவணங்களில் சேர்க்கவும் குறியீட்டு இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன், சீனி மாதிரிகளைப் பரிசோதனை செய்யும் போது இலங்கை தரங்கள் நிறுவனத்தின் தரப்படுத்தல் அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதும், தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் பதிவு பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | பரிசோதனை செய்யப்படும் மாதிரிகளுக்கான மாதிரிப் பதிவேட்டைப் பேணவும், பயன்படுத்தப்படும் தரப்படுத்தல் அளவுகோல்களுக்கு இலங்கை தர நிர்ணய கட்டளைகள் நிறுவனத்தின் பதிவைப் பெறவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | காலாவதியாகும் திகதி 2025 ஜூலை 23 எனக் குறிக்கப்பட்டிருந்த, உற்பத்திக் கிரயம் ரூபா 9,979,210 ஆக இருந்த 31000 கிலோகிராம் சீனி மீது களஞ்சியத்தில் மழை நீர் கசிந்திருந்தது. மேலும், அந்தச் சீனி கையிருப்பின் தரத்தைப் பரிசோதனை செய்து விற்பனை செய்யக்கூடிய நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | கையிருப்பை பாதுகாப்பாகப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சீனி கையிருப்பின் தரத்தைப் பரிசோதனை செய்து விற்பனை செய்யக்கூடிய நிலைக்குக் கொண்டுவர அல்லது முறையாக அகற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | பெல்வத்த பிரிவுக்குச் சொந்தமான இல. 32 - 1348 டிபென்டர் வாகனம் 2016 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளான பின்னர் பல ஆண்டுகளாக கம்பனியிடம் பௌதீக ரீதியாக இருக்கவில்லை. 2025 ஜனவரி 31 ஆம் திகதி வரையிலும் இந்த வாகனம் பிலியந்தலை பிரதேசத்தில் உள்ள ஒரு பழுதுபார்க்கும் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.<br>மேலும் இவ் வாகனத்தைப் பழுது பாரப்பிற்கு சம்பந்தப்பட்ட பழுதுபார்க்கும் நிலையத்திடம் முறையாக ஒப்படைக்கப்பட்டமைக்கான ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை. விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் படி மேற்கொள்ளப்பட வேண்டிய விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>இந்த வாகனத்திற்காக முழுக் காப்புறுதி பெறப்பட்டிருந்த போதும், காப்புறுதி இழப்பீட்டைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவம் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படாமையால், வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் விபத்து காரணமாக மூன்றாம் தரப்பினருக்கு ஏற்பட்ட ரூபா 56,456 இழப்பிற்கான காப்புறுதி இழப்பீட்டைப் பெறமுடியாமல் போயிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் அப்போதைய உயர் முகாமைத்துவத்தால் இந்த வாகனம் பிலியந்தலை பிரதேசத்தில் உள்ள ஒரு பழுதுபார்க்கும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டதாகவும், அதற்கு கேள்வி அல்லது பிற அங்கீகாரம் எதுவும் இல்லை என்றும், நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களில் விபத்து தொடர்பாக நிறுவனத்தால் அதிகாரிகளுக்கு அறிவிக்கப பட்டு பொலிஸாருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் ஏனைய விசாரணைகள் மேற்கொள்ளப் படாது காப்புறுதி இழப்பீட்டைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், காப்புறுதி கம்பனியால் ரூபா 800,000 வழங்கப்படுவதற்கு உறுதியளிக்கப்பட்ட போதும் இதுவரை இழப்பீடு பெறப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விபத்து தொடர்பாகப் பொறுப்பான தரப்பினரை அடையாளம் கண்டு, கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இழபபை மீட்டெடுக்கவும், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும். |
| (ஏ) | செவனகல பிரிவில் கரும்புப் பயிர்ச்செய்கைக்காக கடன் பெற்ற விவசாயிகள் கரும்புப் பயிர்ச்செய்கையிலிருந்து விலகிய தன் காரணமாக 246 பேரிடம் | இதுவரையில் கடன் ஒப்பந்தங்கள் மற்றும் பிணை உறுதி கொண்ட கரும்பு விவசாயிகளுக்குப் பொருட்கள் மற்றும் சேவைகள் வசதிகளை | முழு நிலப்பரப்பையும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். குறித்த காலத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,111,893 மொத்தக் கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த கடன் மீதியில் ரூபா 5,921,176 ஆனது 05 வருடங்களுக்கும் மேலாகவும், ரூபா 542,637 ஆனது 03 முதல் 05 வருடங்களுக்கு இடையேயான காலப்பகுதியிலிருந்தும் அறவிடப்படாதிருந்தது. | வழங்கவும், அதன்படி பிணையாளிகளிடம் இருந்து அறவிட்டு நிறுவன விவசாயக் கடனை அதிகபட்சமாக அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடனை அறவிட நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தாமதமின்றி விவசாயக் கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | செவனகல பிரிவினால் சீனி மற்றும் ஸ்பிரிட் ஆகியவற்றின் உற்பத்திக் கிரயத்தைக் கணக்கிடும் போது, உற்பத்தி நடவடிக்கைகளுடன் தொடர்பில்லாத செலவுகளும் உள்ளடங்கலாக மொத்த செலவின் அடிப்படையில் உற்பத்திக் கிரயம் கணக்கிடப்பட்டிருந்தமையால், உற்பத்திக் கிரயம் மிகைமதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் கணக்குகளில் இது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | உற்பத்திச் செயல் முறையுடன் தொடர் புடைய செலவுகளை மாத்திரமே கருத்தில் கொண்டு உற்பத்திச் செலவைக் கணக்கிட வேண்டும். அதற்காக முறையான ஒரு முறையொன்றைத் தயாரித்து செயற்படுத்த வேண்டும். |
| (ஒ) | செவனகல பிரிவில் 11 வருடங்களுக்கும் மேலாக நிதிக் கூற்றுக்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் ரூபா 9,475,416 வழியில் உள்ள கையிருப்பு மற்றும் பெல்வத்த பிரிவில் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உள்ள ரூபா 84,061,507 போக்குவரத்து கையிருப்பு தொடர்பாக முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு முடிவிலும் அந்த மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2013 ஜனவரி 01 ஆம் திகதி ஆரம்ப மீதியாக இருக்கும் இந்த மீதியை பரிசோதித்து அடுத்த ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | இந்த பொருட்கள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்து மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | செவனகல பிரிவின் கையிருப்பு ஆய்வு அறிக்கைகளின் படி, முன்னைய ஆண்டில் ரூபா 6,777,664 பெறுமதியான 306 கையிருப்புப் பொருட்களின் பற்றாக்குறையும், ரூபா 5,192,625 பெறுமதியான 429 கையிருப்புப் பொருட்களின் மிகுதியும் காணப்பட்டது. மீளாய்வாண்டில் ரூபா 1,571,044 பெறுமதியான 102 கையிருப்புப் பொருட்களின் பற்றாக்குறையும், ரூபா 2,413,192 பெறுமதியான 90 கையிருப்புப் பொருட்களின் மிகையும் காணப்பட்ட போதும், இந்த | சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து விசாரணைகளை மேற்கொண்டு கையிருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | கையிருப்பு தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டைப் பேணி பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாகச் செயற்பட வேண்டும். பொறுப்பான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையிருப்பு மிகை மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் பெல்வத்த பிரிவில் ரூபா 349,429,306 ஆக இருந்த வங்கி மேலதிகப் பற்றுக் கடன் மீதி, ஆண்டின் இறுதியில் ரூபா 790,638,792 ஆக அதிகரித்திருந்ததுடன், வங்கி மேலதிகப் பற்றுக் கடன் வசதிகளைப் பெறுவதற்காக வட்டியாக மீளாய்வாண்டில் ரூபா 70,139,451 செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் விற்பனை கடுமையாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாகவும், பெறப்பட்ட குறுகிய காலக் கடன்கள் மற்றும் மேலதிகப் பற்றுக் கடன் வசதிகளைத் தீர்ப்பதில் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக் கிரயம் குறைக்கும் வகையில் தொழிற்படு மூலதனத் தேவைகளை முகாமைத்துவம் செய்ய வேண்டும். அவ்வாறு செயற்படுவதற்கு ஒரு பயனுள்ள வேலைத்திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டில் செவனகல பிரிவினால் ரூபா 204,236,116 மிகையூதியங்களையும் ஊக்கத் தொகைகளையும், ரூபா 1,280,758,802 ஊழியர் சம்பளத்தையும் ஊதியங்களையும் ரூபா 236,966,243 ஆன மேலதிக நேர கொடுப்பனவுகளையும் விடுமுறை நாள் சம்பளத்தையும் செலுத்துவதற்காக வங்கி மேலதிகப் பற்றுக் கடன் வசதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்காக ரூபா 95,710,969 மேலதிகப் பற்றுக் கடன் வட்டி செலுத்தப்பட்டிருந்தது. ’ | ஆண்டில் போதுமான சீனி மற்றும் ஸ்பிரிட் விற்பனை செய்யப்படாமையால், நிறுவனத்தின் அனைத்து செயற்பாட்டு நடவடிக்கை களின் ”நடைமுறை மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வங்கி மேலதிகப் பற்றுக் கடன் வசதிகளைப் பெற வேண்டியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் மோசமான நிதி நிலைமை மற்றும் தொடர்ச்சியான செயல்பாட்டு அபாயத்தைக் கருத்தில் கொள்ளாது ஊக்கத்தொகைகளையும் மிகையூதியக் கொடுப்பனவுகளையும் வழங்க நடவடிக்கை எடுத்த தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ங) | செவனகல தொழிற்சாலையின் கொள்ளளவு போதாமையால், மீளாய்வாண்டில் 15,237.56 தொன் கரும்பு, பெல்வத்த பிரிவுக்கு மாற்றப்பட்டிருந்தது. இதன்போது ஒரு தொன் கரும்பின் சராசரி விலை ரூபா 10,000 ஐ விஞ்சி, ஒரு தொன்னுக்கு மேலதிகமாக ரூபா 2,500 வீதம் ரூபா 38,093,900 ஆன மொத்த பெறுமதியும் செவனகலவிலிருந்து பெல்வத்த வரை போக்குவரத்துச் செலவு ரூபா 37,437,583 உமாக பெல்வத்த பிரிவினால் ரூபா 75,531,483 மேலதிகச் செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும், செவனகலவிலிருந்து பெல்வத்த வரை போக்குவரத்தின் போது, 72.69 தொன் கரும்பு குறைந்தமை யால் ரூபா 726,900 இழப்பு ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் மூலம் கொள்ளளவு அதிகரிக்கப்படா மையால், மேலதிக கரும்புத் தடிகளை பெல்வத்த பிரிவிற்கு மாற்றி அரைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும், ஒரு தொன் கரும்பிற்காக ரூபா 12,500 செவனகல பிரிவிற்குச் செலுத்துவதற்கு முன்னாள் தலைவரால் அங்கீகரிக்கப் பட்டதாகவும், நிறுவனத்தின் விலைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்துச் செலவு செலுத்தப்பட்டுள்ளதாகவும், கரும்புத் தடிகள் போக்குவரத்தின் போது கீழே விழுவது மற்றும் உலர்தல் போன்ற காரணங்களால் எடையில் குறைவு ஏற்படுவது வழமையானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தொழிற்சாலையின் கொள்ளளவை உகந்த மட்டத்தில் பேணத் தேவையான நடவடிக்கை களை எடுப்பதன் மூலம் அசாதாரண செயற்பாட்டு இழப்புகளைத் தவிர்த்தல் வேண்டும். அதற்காக முறையான வேலைத் திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ச) | பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட விலைகளைப் பார்க்கிலும் குறைவாக ஸ்பிரிட்ஸ் விற்பனை செய்தமையால், மீளாய்வாண்டில் செவனகல பிரிவிற்கு ரூபா 36,853,050 இழப்பும், பெல்வத்த பிரிவிற்கு ரூபா 248,790,000 இழப்புமாக கம்பனிக்கு ரூபா 285,643,050 இழப்பு ஏற்பட்டிருந்தது. | அப்போதைய தலைவரால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ், பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட விலை களை விடக் குறைவாக ஸ்பிரிட் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான விசாரணையை நடத்தி பொறுப்பான தரப்பினரிடமிருந்து உரிய இழப்பை மீட்டெடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஞ) | வணிக வளத் திட்டமிடல் முறைமைக்காக (ERP) மீளாய்வாண்டின் முடிவில், கம்பனியால் ரூபா 77,548,027 செலவு செய்திருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த திட்டத்தின் முன்னேற்றம் மந்தமான நிலையில் காணப் பட்டது. அதன்படி, திட்டத்தின் பணிகளை முடித்து, எதிர்பார்த்த பயனைப் பெறக்கூடிய நிலைக்குக் கொண்டுவர கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது, கணக்கீட்டுத் தகவல்களை உள்ளிடும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும், திட்டத்தின் செயற்திறன் மந்தமான மட்டத்தில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | திட்டத்தின் பணிகளை நிறைவு செய்து, எதிர்பார்த்த பயனைப் பெறக்கூடிய நிலைக்குக் கொண்டுவர துரித வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| (ட) | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் செவனகல பிரிவின் சீனி உற்பத்தி 3.97 சதவீதத்தினால் குறைந்திருந்த போதும், சீனி உற்பத்திக்குரிய சம்பளச் செலவு 30.35 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் RCS குறைந்துள்ளதுடன், ஊழியர் சம்பளத்துக்கான செலவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவத்தால் செலவுத் தகவல் மீது கவனம் செலுத்தி, செலவு கட்டுப்பாட்டுக்கான மூலோபாயங்களைச் செயற்படுத்த வேண்டும். |
| (ண) | 2023 ஆம் ஆண்டின் கையிருப்பு ஆய்வு அறிக்கையின் படி பற்றாக்குறை எனக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 6,777,664 பெறுமதியான 306 பொருட்கள் தொடர்பாகவும், மிகையாகியிருந்த ரூபா 5,192,625 பெறுமதியான 429 பொருட்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் கையிருப்பு ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டி ராததுடன் குறித்த பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சம்பந்தப்பட்ட தரப்பினரிட மிருந்து விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு கையிருப்புப் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர் பாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கையிருப்பு தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டைப் பேணி பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக முறையாகச் செயற்பட வேண்டும். |
| (த) | முன்னைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செவனகல தொழிற்சாலையின் கொள்ளளவை விரிவாக்கும் திட்டமானது | உடன்படுவதாகவும், இத்திட்டத்தைச் செயற்படுத்தும் நிலைக்குக் கொண்டுவர தேவையான | முறையான சாத்தியக்கூறு ஆய்வு செய்யாமை, கால அட்டவணைக்கு இணங்கத் திட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முழுமையாகச் செயற்படுத்தும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. அதற்காக இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 201,782,433 பெறுமதியான இயந்திரங்கள் பயன்படுத்தப்பட முன்னர் உத்தர வாதக் காலம் முடிவடைந்திருந்த துடன், கொள்வனவு நடைமுறை யைப் பின்பற்றாமல் ரூபா 7,723,058 பெறுமதியான இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இயந்திர இறக்குமதிச் செயல் முறையில் உள்ள குறைபாடுகள் காரணமாக ரூபா 3,622,005 தாமதக் கட்டணம் செலுத்தப் பட்டிருந்ததுடன், இயந்திரங்களை நிறுவுவதற்காக இந்தியாவிலிருந்து வந்த விநியோகஸ்தரின் ஊழியர் களுக்கு உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக ரூபா 2,824,704 செலவிடப்பட்டிருந்த போதும், விநியோகஸ்தருடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தில் அது குறித்த நிபந்தனைகள் உள்ளடக்கப்பட வில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்படுத்தாமை, கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகியமை தொடர்பாக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், திட்டத்தைச் செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் காரணமாக கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இழப்பை மீட்டெடுக்கவும், திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த ஒரு முறையான வேலைத்திட்டத்தை உருவாக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ந) | பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளில் கொதிகலன்களுக்காக எரிபொருள் எண்ணெயைக் கொள்வனவு செய்யும் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யாமல், பெறுகை நடைமுறையைப் பின்பற்றாது வெளிநபர்களுக்கு எரிபொருள் எண்ணெய் விநியோக கேள்வி வழங்கப்பட்டிருந்தது. அவ் விநியோகஸ்தரால் சுத்திகரிக்கப் பட்ட எரிபொருள் எண்ணெய்க்குப் பதிலாக கப்பல்கள் மற்றும் இயந்திரங்களிலிருந்து அகற்றப்பட்ட சுத்திகரிக்கப்படாத தரமற்ற கறுப்பு எண்ணெயை வழங்கியிருந்ததுடன், கம்பனி அதற்காக ரூபா 341,687,582 செலுத்தியிருந்தது. இந்த தரமற்ற கறுப்பு எண்ணெயைப் பயன்படுத்தியதன் காரணமாக கொதிகலன் அவ்வப்போது செயலிழந்த 46 நாட்களின் போது நிறுவனத்திற்கு ரூபா 300,000,000 பெறுமதியான 600,000 லீட்டர் எத்தனால் உற்பத்தி இழக்கப்பட்டிருந்தது. | அப்போதைய முகாமைத்துவத்தால் செயற்படுத்தப்பட்ட இந்த எரிபொருள் எண்ணெய் கேள்வி தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வுப் பிரிவின் விசாரணை நடைபெற்று வருவதாகவும், இது தொடர்பான அனைத்து ஆவணங்களும் அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், அவற்றைப் பெற்றதை அடுத்து பதிலளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யப்படும் எரிபொருள் எண்ணெயின் தரத்தைப் பரிசோதனை செய்து1. தரமற்ற எரிபொருள் எண்ணெயைக் கொள்வனவு செய்தமையால் கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இழப்பை பொறுப்பான தரப்பினரிடமிருந்து மீட்டெடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ப) | கம்பனியின் ஊழியர் தேவை மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக திறைசேரியின் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறாது, பெல்வத்த பிரிவினால் 2021/2022 ஆண்டுகளில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு முறையற்ற விதத்தில் 159 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 510 ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது. | கம்பனிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறை இதுவரை இல்லை என்றும், தேவைக்கேற்ப ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு பதவியணி எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்ளவும், முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளவும், முறைசாரா ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக முறையான விசாரணையை நடத்தி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ம) | செவனகல பிரிவின் மதுபானச் சாலைக்குத் தேவையான நீராவி (Steam) பெறுவதற்காக உயிர் வளக் கொதிகலன் ஒன்றை நிறுவனத்திற்குள் நிறுவுவதற்காக வெளிநபருடன் 2022 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்டு ரூபா 48,600,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்திற்காக தொழிற்சாலை ஆலோசகரால் தவறான தரவுகளை உள்ளிட்டுத் தயாரிக்கப்பட்ட கிரயப் பயன் பகுப்பாய்வுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், சம்பந்தப்பட்ட விநியோகஸ்தரைத் தெரிவு செய்கையில் முறையான கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தக் கொதிகலன் நிறுவனத்திற்குள் நிறுவப்படாதமையால், செலவிடப்பட்ட ரூபா 48,600,000 விளைவற்ற செலவாகி இருந்தது. | கொதிகலனை நிறுவுவதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 48,600,000 முற்பணத்தை மீண்டும் பெற நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையாக கிரயப் பயன் பகுப்பாய்வு செய்யாமை, கொள்வனவுகளின் போது முறையான பெறுகை நடைமுறையைப் பின்பற்றாமை காரணமாக கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இழப்பை பொறுப்பான தரப்பினரிடமிருந்து மீட்டெடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ய) | கம்பனியின் செயற்பாடுகள் அல்லது கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பில்லாத வெளிப்புற நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கம்பனியின் விருந்தினர் இல்லங்களில் தங்குமிடம் வழங்குதல் மற்றும் உணவு | இந்தச் செலவில் நிறுவனத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சில செலவுகள் இருப்பதாகவும், கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு நிறுவனத்திற்குத் | சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இழப்பை பொறுப்பான தரப்பினரிடமிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்காக 2020 ஜனவரி முதல் 2022 ஏப்ரல் மாதம் வரை ரூபா 10,260,433 செலவிடப்பட்டிருந்தது. | தொடர்பில்லாத தரப்பினருக்காக அதிக பணம் செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அறவிட்டுக்கொள்ள வேண்டும். |
| (ர) | செவனகல பிரிவின் பிரதான களஞ்சியத்தில் இருந்த சந்தை மதிப்பு ரூபா 560,700 ஆன 1486 கிலோகிராம் பித்தளை மற்றும் செம்பு காணாமல் போயிருந்தது. | பித்தளைத் தூள் மற்றும் செம்புத் துண்டுகள் காணாமல் போனது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மேலும் எம்பிலிபிட்டி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்பான தரப்பினரை அடையாளம் கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு இழப்பை அறவிட்டுக்கொள்ள வேண்டும். |
| (ல) | செவனகல பிரிவினால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 9,564,866 பெறுமதியான ஆவியாக்கும் இயந்திரம் இறக்குமதி செய்யப்பட்டு அதற்காக ரூபா 3,924,394 சுங்கக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. அதனுடன் தொடர்புடைய பாகங்கள் (SS Tube) விவரக்குறிப்புகளுக்கு இணங்காததால் திருப்பி அனுப்பப்பட்டு, 2019 ஆம் ஆண்டில் மீண்டும் இறக்குமதி செய்யப்பட்ட போது செலுத்தப்பட்ட ரூபா 4,830,446 சுங்கக் கட்டணம் விநியோகஸ்தரிடமிருந்து அறவிடப்படாதமையால் கம்பனிக்கு ரூபா 4,830,446 இழப்பு ஏற்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக ஆரம்ப விசாரணை நடத்தப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான விசாரணைகளை நடத்தி கம்பனிக்கு ஏற்பட்டுள்ள இழப்பை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிட்டுக்கொள்ள வேண்டும். |
| (வ) | அவசர மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான தேவையைச் சுட்டிக்காட்டி 2023 ஜூலை 12 ஆம் திகதி செவனகல பிரிவின் பிரதான செயற்பாட்டு அதிகாரியின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு ரூபா 2,200,000 தொகை நேரடியாக மாற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக பிரதம நிறைவேற்று அதிகாரியால் கம்பனியின் சட்டங்களுக்கு முரணாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. கடன் வழங்கும் போது பிரதான செயற்பாட்டு அதிகாரியுடன் கடன ஒப்பந்தம் எதுவும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் கடன் வழங்குவதற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது சம்பந்தப்பட்ட பணம் கம்பனிக்கு மீண்டும் செலுத்தப்பட்டதாகவும் இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ழ) | கம்பனி அரசாங்கத்தால் கையேற்கப்பட்டதை அடுத்து ஆரம்பிக்கப்பட்டிருந்த 09 வெவ்வேறு திட்டங்கள் முழுமையாகக் கைவிடப் பட்டிருந்தமையால், அந்தத் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 138,683,729 விளைவற்ற செலவாகி இருந்தது. | நிறுவனம் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டதன் பின்னர் இருந்த நிர்வாகிகளால் ஆரம்பிக்கப்பட்ட 09 திட்டங் கள் வேலைகளை முடிப்பதற்கு முன்னர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இத் திட்டங்களில் சில திட்டங்கள், ஆரம்பிப்பதற்கு முன்னர் செலவிடப்பட்ட ஆரம்ப செலவுகளை மாத்திரமே செலவிடப்பட்டுள்ளதாகவும் முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. | செலவிடப்பட்ட தொகை கள் பயனற்ற செலவு களாக மாறியுள்ளதால், திட்டங்கள் தொடர்பாக மீண்டும் பகுப்பாய்வு செய்து, பயனுள்ள திட்டங்களை விரைவாக முடித்து பயனைப் பெறக்கூடிய நிலைக்குக் கொண்டுவர ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். |
| (ள) | செவனகல பிரிவுக்குச் சொந்தமான பகுதி இல. 04 (கொவுல் ஆர) மற்றும் பகுதி இல. 05 (கினிகல்பெலஸ்ஸ) ஆகிய 1072.89 ஹெக்டேயர் நிலப்பரப்பில் 74.21 ஹெக்டேயர் பரப்பளவில் அநாவசிய பயிர்ச்செய்கைகளும், 8.32 ஹெக்டேயர் பரப்பளவில் அநாவசிய வீடுகள் மற்றும் கடைகள் கட்டப்பட்டிருந்தன. | இந்த காணிகளுக்காக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், பிஸ்கல் உத்தரவுகளைப் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கும், மீதமுள்ள காணித் துண்டு களுக்காகவும் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. | அநாவசிய பயிர்ச்செய்கைகளை அகற்றி, முழு நிலப்பரப்பையும் கரும்புப் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்த முறையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ற) | பெல்வத்த பிரிவின் உத்தியோக பூர்வ வீடுகளின் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதிகாரிகளின் உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கு வீட்டு வாடகை அறவிடப்படவில்லை. செவனகல பிரிவினால் மாதந்தோறும் ரூபா 100 இலிருந்து ரூபா 850 வரையிலான பல்வேறு கட்டணத் தொகைகள் பெயரளவிலான வாடகையாக மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. மேலும், உத்தியோகபூர்வ குடியிருப்புகளின் நீர்க் கட்டணங்களும் மின்சாரக் கட்டணங்களும் அதிகாரியால் தனிப்பட்ட முறையில் செலுத்தப்பட வேண்டிய போதிலும், செவனகல பிரிவில் நீர் பாவனை 60 அலகுகளுக்கு மேற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே அதிகாரியிடமிருந்து கட்டணம் அறவிடப்பட்டு மின்சாரப் பாவனைக்காக மாதந்தோறும் ரூபா 250 சலுகை வழங்கியதன் | உத்தியோகபூர்வ குடியிருப்பு களுக்கான வாடகை இன்னும் அறவிடப்படாதுள்ளதுடன் பராமரிப்பு வேலைகளும் நிறுவனத்தால் மேற்கொள்ளப் படுவதாகவும், இந்த வீடுகளுக்கு வாடகைத் தொகையைத் தீர்மானிக்கவும், ஒரு குறிப்பிட்ட வரம்பு வரை பராமரிப்புச் செலவுகளை சம்பந்தப்பட்ட ஊழியர்களிட மிருந்து விதிப்பதற்கும் உரிய ஒரு அறிக்கையை வழங்கு வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், குழு அறிக்கையின் படி எதிர்காலத்தில் செயற்பட முடியும் என்றும் முகாமைத்துவம் தெரிவித்துள்ளது. செவனகல தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து ஊழியர் சலுகையாக ஊழியர் களிடமிருந்து பெயரளவிலான வாடகை அறவிடப்படு வதாகவும், சலுகையாக | கம்பனிக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ குடியிருப்புகளைப் பயன் படுத்தும் அதிகாரிகளிட மிருந்து மாத வாடகை அறவிட வும், கம்பனியால் செலுத்தப்பட்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பட்டியல் கட்டணங்களை மீண்டும் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

காரணமாக மீளாய்வாண்டில் அதிகாரிகளுக்குரிய ரூபா 8,959,256 தனிப்பட்ட கட்டணங்களைச் செலுத்த கம்பனியின் நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது.

அறவிடாமல் 60 அலகுகள் நீர் பாவனை ஊழியர்களுக்கு வழங்கப்படுவதாகவும் முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.